Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-08 | 24-08-2005 | புதன் கிழமை | ஓசை-188


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12425)

## யாழ். குடா நாட்டிற்கு மேலதிக கலகம் அடக்கும் பொலிசார்!

### அனுப்பி வைக்க பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை

*யாழ். மாவட்டத்திற்கென மேலதிக கலகமடக்கும் பொலிசாரை அனுப்பி வைக்க சிறிலங்கா பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது. கலகம் அடக்குவதற்கான விசேட பயிற்சி களைப் பெற்ற பொலிசாரே இவ்வாறு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக யாழ். பொலிஸ்நிலைய வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

தற்போது அவசரகாலநிலைமை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இப்பொலிஸ் படை விசேட பொலிஸ் நடவடிக்கை களுக்காக மாத்திரம் பயன்படுத்தப் படும் என்றும், இப்படை அடுத்தமாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வரும் என்றும் யாழ்.பொலிஸ் வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் அதி உயர் பீடத்தின் உத்தரவின் பேரில் இக்குழு யாழ்ப்பா ணம் அனுப்பிவைக்கப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (33)

## தமிழ்மக்கள் மீது யுத்தத்தை வலிந்து திணிக்க சிறிலங்காப் படைகள் செயற்பட்டு வருகின்றன

*– மன்னார் பொதுஅமைப்புக்கள் கண்டனம்*

அமைதியை விரும்பும் மன்னார் பொது மக்களாகிய நாம் சிறிலங்கா படையினர் மீண்டும் ஓர் யுத்தத்தை மக்கள் மேல் திணிக்க உறுதியாக தீர்மானித்துவிட்டமை போன்ற செயற் பாடுகளில் அண்மைக்காலமாக ஈடுபட்டு வருவதை ஆழ்ந்த கவலை யுடன் தெரிவித்து கொள்கின்றோம் என்று மன்னார் மாவட்டபொது அமைப்புக்கள் நேற்று கூட்டாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிற்கு வழங்கிய மகஜரில் குறிப்பிட்டுள் ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் அதன் விளைவான யுத்தநிறுத்தம் ஒன்றும் அமுலில் இருப்பதை சற் றேனும் கவனத்தில் கொள்ளாது

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் தேசிய எழுச்சி வாரம் கிளி.யில் நாளை ஆரம்பமாகும்!

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டினை முன்னிட்டு தமிழ்தேசிய எழுச்சி செயலணிக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் தேசிய எழுச்சி வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாளை 25 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள தமிழ்தேசிய எழுச்சி வாரத்தின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம ரீதியாக மக்கள் தரிசனங்கள் மேற்கொள்ளப் பெற வுள்ளதுடன் தமிழ் தேசிய விழிப்புணர்வு வீதி நாடகங்களும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (சோ)

*- இராணுவத்தால் கைதாகி காணாமற்போனோர் -*

## ஆட்கொணர்வு மனு நவம்பர் வரை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டு காணாமல் போனோர் தொடர் பான ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் மாதம்28 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் தொடர்பான மூன்று மனுக்கள் யாழ்.மாவட்ட நீதி மன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த விசாரணையின்போது அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நீதவான், இந்த மனுக்கள் மீதான விசாரணைகளை நவம்பர் மாதம் இறுதிவரை ஒத்திவைத்தார்.

யாழ். மாவட்ட நீதவான் விக் கினராஜா. முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சிறிலங்கா இராணுவ சட்டத்தரணி கப்டன் கரு ணாதிலக்க நீதிமன்றத்தில் ஆஜராக வில்லை.

## ரணிலின் வீட்டைப் படமெடுத்த குற்றச்சாட்டில் தமிழர் கைது!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தி யோக பூர்வ இல்லம் மற்றும் கொழும் பில் உள்ள பிரதான பாடசாலை உட்பட முக்கிய இடங்கள் சில வற்றை ஒளிப்பதிவு செய்ததாகக் கூறப்படுகின்ற தமிழர் ஒருவரை கறுவாத்தோட்ட பொலிசார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

முற்பகல் 11.30 மணியளவில் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் 47 வயது மதிக்கத்தக்க நடராசா சிவகு மார் என்ற இந் நபரைக் கைது செய்து விசாரணைக்காகப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம்; பேச்சுக்கு விடுதலைப் புலிகள் தயார்

*- நோர்வே சிறிலங்கா அரசிற்கு அறிவிப்பு*

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக் கையை முழுமையாக அமுல்படுத்து வது தொடர்பில் அரசாங்கப் பிரதி நிதிகளுடன் பேச்சுக்களை நடத்து வதற்கு விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக சிறிலங்கா அரசாங்கத் திற்கு நோர்வே அறிவித்துள்ளது.

இத்தகவலை சிறிலங்கா அர சிற்கு அறிவித்து விட்டதாக நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்ததாக கொழும்பு ஊடகமொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை தொலை பேசியினூடாக தொடர்பு கொண்ட நோர்வே வெளி விவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் விடுதலைப் புலி களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் லண்டனில் நடை பெற்ற சந்திப்புக் குறித்து விளக்கிய தாகவும், விதார் ஹெல்கேசன் கூறினார்.

விடுதலைப்புலிகளின் சம்ம தத்தை சிறிலங்கா அரசாங்கத் திற்கு கடந்த வியாழக்கிழமையும் வெள் ளிக்கிழமையும் அறிவித்ததாகவும், எனினும் சனாதிபதியுடன் நேற்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி தலைவர்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரிற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் கட்சித் தலை வர்கள் கொழும்பில் நேற்று ஊடக வியலாளர் மாநாட்டை நடத்தினர்.

இதில் அமைச்சர்களான டக்ளஸ் தேவனந்தா, தினேஸ் குணவர்த்தன, டி யூ குணசேகர உட்பட பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்சித்தலை வர்கள் பிரதம மந்திரி மகிந்தராஜ பக்ஷவிற்கு எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தமது ஆதரவைத் தெரிவிப் பதாகத் தெரிவித்தனர்.

நாட்டைச் சுபீட்சமாக இட்டுச் செல்வதற்கும் அடுத்த கட்டமாக நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று உரியவகையில் நாட்டை இட்டுச் செல்வதற்கும் மகிந்தராஜ பக்ஷ தகுதியானவர் எனவும் எனவே தமது ஆதரவை அவருக்கு அளிப்ப தாகவும், இந்தக் கூட்டத்தில் தெரி விக்கப்பட்டது.

*- பிரதமரின் பிரசன்னமின்மையால் -*

## சனாதிபதியின் அதிகாரக் குறைப்பு உள்ளிட்ட இரு சட்ட திருத்தங்கள் சமர்ப்பிப்பு நிறுத்தம்!

(கொழும்பு)

அரசாங்கக்கட்சியால் சமர்ப்பிக்கப்படவிருந்த இரண்டு சட்டதிருத்தங்கள் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படவில்லை பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தராஜ பக்ஷ இந்த சட்டதிருத்தப் பிரேரணைகளை சமர்ப்பிப்ப தாக இருந்தார். இருந்தாலும் அது சமர்ப்பிக்கப்படா மையால் இந்த பிரேரணைகள் எதிர்காலத்திலும் சமர்ப் பிக்கப்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியலமைப்பில் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறை வேற்று அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கும், பிரதம மந்திரிக்கும் பகிர்ந்தளிப்பது அதேபோல் தேர்தல்சட்ட மொன்றைத்திருத்துவது போன்ற இரண்டு பிரேரணைகள் நேற்று சமர்ப்பிக்கப்படவிருந்தது. எனினும் அவர் நேற்று இந்தப் பிரேரணையைச் சமர்ப்பிக்க பாராளுமன்றத்திற்கு வரவில்லை எனப் பாராளுமன்றத்தரப்புக்கள் தெரிவிக் கின்றன. (32)

*- சேதுசமுத்திரத்திட்டத்திற்கு எதிராக -*

## இந்தியத் தூதரகம் முன்னால் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பில் உள்ள இந்தியத்தூதரகத்திற்கு முன் பாக மதியம் 12 மணியளவில் ஆர்ப்பாட்டமொன்று நடை பெற்றது.

சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் ஒழுங்கு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சேது சமுத்திரத் திட்டத்தினைக் கைவிட வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

சேதுசமுத்திரத்திட்டத்தினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து தெளிவான அறிக்கைகள் தம்மிடம் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள், இதன் காரணமாகவே இத்திட்டத்தை எதிர்ப்பதாக கூறியுள்ளனர்.

இத்திட்டத்தினால் இலங்கையிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள சேது

(12ஆம் பக்கம் பார்க்க)

*-சனாதிபதித்தேர்தலை வலியுறுத்தி-*

## 10 இலட்சம் கையொப்பங்கள் இன்று தேர்தல் ஆணையரிடம் கையளிப்பு

(கொழும்பு)

2005ஆம் ஆண்டில் சனாதிபதித்தேர்தலை வலியுறுத்தி சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி பொதுமக்களிடையே சேகரித்து வந்த கையெழுத்துத்தொகுப்பை இன்று தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கவுள்ளது. நாடளாவிய ரீதியில் கடந்த மூன்று வாரங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த இந்தக் கையெழுத்து வேட்டையில் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட கையொப்பங்கள் திரட்டப்பட்டிருப்பதாக ஐ.தே.க. தெரிவித்தது. இதேவேளை சனாதிபதித்தேர்தலை இவ்வாண்டிலே நடாத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி ஐ.தே.க.மாபெரும் மக்கள் சக்தி பேர ணியை அண்மையில் நடத்தியிருந்தமை தெரிந்ததே. (32)

# தவறிவிட்டது

நா.ஜெயராணி,தேவாலய வீதி, சங்கானை என்பவரது பிரயாணப்பை (கறுப்பு நிறம்) முக்கிய ஆவணங்கள் உடுப்புக்கள் உள்ளடங்கியதாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்கையில் ஓமந்தைக்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப் படுகின்றீர்கள். தகவல்:– நா.ஜெயராணி. (6661)

# தனியார் பேருந்து உரிமையாளர் பார்வைக்கு

நீண்ட காலமாகப் பேணுகையில் உள்ளதும், பேணுகை முடிந்து பணி செய்யும் நிலையிலுள்ளதுமான ஊர்தி உரிமையாளர்கள் கீழ்வரும் விளக்கங்களைப் பயணியர் போக்குவரவு ஊர்தி வழியனுமதிப்பணியகம்-புதுக்குடியிருப்புக்கு எழுத்து மூலம் 10.09.2005 ஆம் நாளுக்கு முன் அறியத்தருமாறு வேண்டுகின்றோம்.

01. ஊர்தியின் தமிழீழ எண் :-

02. பொறி எண் :-

03. தள எண் :-

04. உரிமையாளர் பெயர் :-
முகவரி :-

05. தனியார் பேருந்து உரிமையாளர் கழகத்தில் பதிவு செய்த நாள்

06. பேணுகை நிறைவடைந்த நாள் அல்லது பேணுகை நிறைவடையும் என எதிர்பார்க்கும் நாள் :-

07. பேணுகை செய்வதற்கு முன் பணி செய்த வழித்தட விளக்கம் :-

குறிப்பு:-
10.09.2005 ஆம் நாளுக்குப்பின் இக்கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு.

(சி.12584)

# மாற்று வலுவுள்ளோர்க்கான (வலுவிழந்தோர்)

## முக்கிய அறிவித்தல்

வவுனியா வடக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ். தென்மராட்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பெரும் நிலப்பரப்பை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட வலுவிழந்தோர் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் சம்பந்தமானது.

வடகிழக்கு மாகாணங்களில் வலுவிழந்தோரின் நலனுக்காக அளப்பரிய சேவையாற்றி வரும் வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனத்தினரின், எதிர்கால வலுவிழந்தோர் நலனுக்கான செயற்பாடுகளில் தாங்களும் இணைந்து பயன்பெறும் வகையில், தங்கள் பதிவை மேற்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்களை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் தத்தமது நிரந்தர வசிப்பிடத்திற்கு அண்மையில் உள்ள வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனத் தொடர்பகங்களில் பதிவை மேற்கொள்ளலாம்.

**காலம்-26. 08. 2005-06. 09. 2005 வரை**
**நேரம்-காலை 8. 00மணி:4. 30 மணிவரை**

***தொடர்பகங்கள் அமைந்துள்ள இடங்கள் பின்வருமாறு***

| | | |
|---|---|---|
| கிளிநொச்சி | வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் கரடிப்போக்கு | |
| பளை | தொடர்பகம் | பளை |
| பூநகரி | தொடர்பகம் | பூநகரி |
| தாளையடி | தொடர்பகம் | தாளையடி |
| புதுக்குடியிருப்பு | தொடர்பகம் | கைவேலி புதுக்குடியிருப்பு |
| முல்லைத்தீவு | தொடர்பகம் | முல்லைத்தீவு |
| நெடுங்கேணி | தொடர்பகம் | நெடுங்கேணி |
| கனகராயன் குளம் | தொடர்பகம் | கனகராயன் குளம் |
| மாங்குளம் | தொடர்பகம் | மாங்குளம் |
| பனங்காமம் | தொடர்பகம் | பனங்காமம் |
| ஆண்டான்குளம் | தொடர்பகம் | ஆண்டான்குளம் |

*பணிப்பாளர்,*
*வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவன தலைமைச் செயலகம்,*
*கிளிநொச்சி.*

(சி.12616)

# உழவுஇயந்திர உரிமையாளர்களுக்கு முக்கிய கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேசத்திற்குட்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்களுடனான முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இப்பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து உழவு இயந்திர உரிமையாளர்களை மேற்படி கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் சங்கத் தலைவர் ஆலாலசுந்தரம் வேண்டியுள்ளார் (சோ)

# தொழிற்சாலை திறந்துவைப்பு

மூதூர் கிழக்கு கணேசபுரம் கிராமத்தில் திருகோணமலை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் சிமெந்து கல்அரியும் தொழிற்சாலை ஒன்றை கடந்த திங்கடகிழமை திறந்து வைத்துள்ளது (25)

# 2ஆம் லெப் மாலதியின் நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும்

முன்னிட்டு

# மகளிர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் நாடகப் போட்டி-2005

- அனைத்து மாவட்டங்களிலிருந்தும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
- மாவட்டத்திலமைந்துள்ள பொதுஅமைப்புக்கள் கலை சார்ந்த மன்றகளிலிருந்தும் பங்கு பற்றலாம்

## விதிமுறைகள்:-

- நாடகப் போட்டியில் பங்குபற்றுவோர் எமது போட்டி விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- நாடகத்தில் 15-20 பேர் நடிக்கலாம் பக்க வாத்தியம் பாடகர் தவிர
- சிறந்த நடிகர்களுக்குரிய பரிசில்கள் இருப்பதால் ஒருவர் இரு பாத்திரத்திற்கு மேல் நடிக்க முடியாது.
- நாடகம் 30-40 நிமிடங்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்
- வயது வேறுபாடு அற்று இருபாலரும் கலந்து கொள்ளலாம்
- போட்டியில் பங்கு பற்றும் நாடகங்கள் யாவற்றிற்கும் நடுவர்களின் தீர்பே இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும்.
- போட்டியில் பங்குபற்றும் பொதுஅமைப்புக்கள் கலை சார்ந்த மன்றங்கள் தங்கள் பதிவுகளை 05.09.2005 இற்கு முன் மேற்கொள்ளவும்.
  இதற்கான மேலதிக விபரத்தினை அந்த மாவட்ட அரசியல்துறை செயலகத்திலும் அந்த மாவட்ட அரசியல்துறை மகளிர் செயலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
- நாடகப் போட்டிக்கான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பங்கு பற்றும் அமைப்புக்கள் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அல்லது மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் பங்கு பற்றும் அமைப்பின் அல்லது மன்றத்தின் தலைவர் அல்லது நாடகத்தின் நெறியாளரின் ஒப்பமும் இருத்தல் வேண்டும்.
- இவை தேசியத்தை வலுப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

"போட்டிக்கான கருப்பொருள்"

(01) "சமூகத்தில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்"

(02) போராட்டத்தின் வளர்ச்சி-சமூக பெண்களில் ஏற்படுத்திய மாற்றங்கள்.

(03) இன்றைய மக்களின் சமகால வாழ்வியலும் சமுதாயச் சீர்திருத்தமும்.

(04) இன்றைய சமூகத்தில் மாறி வரும் சிந்தனைகள்

- மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்

நிர்வாகி
இசைக்கல்லூரி
மகளிர் கலைபண்பாட்டுக் கழகம்
பரவிப்பாஞ்சான்,
4 ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

(சி.12581)

# ஆங்கில ஆசிரியர் பணிநிலைக்கான வேண்டுகை

பகுதி நேரமாகவோ முழு நேரமாகவோ ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய இரு பாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்:-** அ) பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்
ஆ) பட்டதாரிகள்
02. **பட்டறிவு :-** ஆங்கில ஆசிரியராக ஐந்து ஆண்டுகளுக்கு மேல்பணி யாற்றியிருத்தல் வேண்டும்.
03. **அகவை :-** 30 தொடக்கம் 60 வரை
04. **வேண்டுகை முடிவு நாள்:-** 2005.08.31
05. **வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:-** பொறுப்பாளர்
மனித வள மேம்பாட்டுப்பகுதி
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.
06. **நேர்காணல் நடைபெறும் நாள்:-** 03.09.2005
07. **நேர்காணல் நடைபெறும் இடம் :-** மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,
கிளிநொச்சி.
08. நேர்காணலுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றின் படிகளுடன் வருகை தரவேண்டும்.
09. **சம்பளம்:-** ஆசிரியராகத்தெரிவு செய்யப்படுவோரின் தகைமைக்கும் பட்டறிவுக்கும் ஏற்ப பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாத சம்பளம் வழங்கப்படும்.

ஆளுமை,
மனித வள மேம்பாட்டுப்பகுதி,
நிதித்துறை.

(சி .12583)

# அந்நிய ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்கு என் உயிரையும் தியாகம் செய்வேன்

## ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன்

(அம்மான்)

**"அந்நிய ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்காகவும் அரபு தேசியத்தைப் பாது காப்பதற்காகவும் என் உயிரையும் தியாகம் செய்வேன்" என்று ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் கூறியுள்ளார்.**

தற்போது சதாம் ஹுசைன் ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டு இருக்கிறார். போர்க்கால குற்றங்களுக்காக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.


அவர் ஜோர்டானில் உள்ள தன் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இந்தக் கடிதத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சம்பந்தப்பட்டவரிடம் கொடுத்துள்ளது. இந்தக் கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது;

" அந்நிய நாட்டு ஆக்கிரமிப்பில் இருந்து தாய் நாட்டை விடுவிப்பதற்காகவும் அரபு தேசியத்தைப் பாதுகாப்பதற்காகவும் என் உயிரையும் தியாகம் செய்வேன், அன்பு, விசுவாசம், பாரம்பரியம், வரலாறு ஆகியவற்றுக்கு மரியாதை இல்லை என்றால் வாழும் வாழ்க்கை அர்த்தமற்றது.

என் சகோதரனே உன் மக்களை நேசி.உன் நாட்டை நேசி.பலஸ்தீனத்தை நேசி.பலஸ்தீனம் வாழ்க.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் சதாம் ஹுசைன் கூறியிருக்கிறார்.

அமெரிக்க இராணுவத்தின் கடும் தணிக்கைக்குப் பின்பே இந்தக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ அவருக்குக் கிடைத்திருக்கிறது.



சதாம் ஹுசேன்

அந்தக் கடிதத்தில்,இஸ்ரேலுக்கு எதிராக தற்கொலைத் தாக்குதல் நடத்திப் போராடி வரும் பலஸ்தீன தீவிரவாதிகளைச் சதாம் ஹுசைன் புகழ்ந்து இருக்கிறார். சதாம் ஹுசைன் குடும்பத்தினர், அவரைப் பார்க்க முடியவில்லை. அவர்களுக்கு சதாம் எழுதும் கடிதங்களும் தணிக்கைக்கு உள்ளாகித்தான் வெளிவருகின்றன. கடிதத்தின் பெரும்பகுதி நீக்கப்பட்டுத்தான் குடும்பத்தினருக்குக் கிடைக்கிறது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அடுக்கு மாடிக் கட்டடம் இடிந்தது மும்பையில் 10 பேர் பலி; பலர்காயம்



(மும்பை)

இந்தியாவின் மும்பை நகரில் நேற்று முன்தினம் நள்ளிரவு நான்கு மாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததில் இறந்தவர்களின் எண்ணிக்கை பத்தாக அதிகரித்துள்ளது. இந்த விபத்தில் 40 பேர் காயமடைந்துள்ளார்கள். இடிபாடுகளுக்கிடையில் சிக்கியிருப்போரை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

சுமார் 25 குடும்பங்கள் வசித்ததாகக் கூறப்படும் இந்தக் கட்டட இடிபாட்டில் மேலும் பலர் சிக்கியிருக்கக் கூடுமென்று தெரிவிக்கப் படுகின்றது.

விபத்து இடம்பெற்ற பகுதியை நேற்றுப் பார்வையிட்ட மராட்டிய முதலமைச்சர் விபத்துக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## போர்த்துக் கல்லில் மோசமான காட்டுத் தீ

போர்த்துக்கல்லில் வரட்சி காரணமாக ஏற்பட்டுள்ள காட்டுத் தீயினால் இதுவரை ஒரு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து ஐந்நூறு ஹெக்ரேயர் காட்டுப் பகுதி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இதனால் நாடு முழுவதும் பரவியிருந்த புகை மூட்டத்தில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிவேகமாகப் பரவி வரும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் 27 காட்டுப் பகுதிகளில் சுமார் 3000 தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மிகவும் மோசமாகப் பரவி வரும் காட்டுத் தீயினால் மக்களிடையே அச்சமும் பதற்றமும் நிலவி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெருமளவு விவசாய நிலங்களும், குடியிருப்புக்களும் தீக்கிரையாகியுள்ளதால் மேலும் காட்டுத் தீ பரவக்கூடும் என்ற அச்சம் நிலவும் பிரதேசங்களிலுள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் எரியும் காட்டுத்தீயினைக் கட்டுப் படுத்துவதற்காக பிரான்ஸ், ஸ்பெயின் இத்தாலி மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து தீயணைப்பு வாகனங்களும் விமானங்களும், போர்த்துக்கல்லுக்கு வரவழைக்கப்பட்டுள்ளன.

## ஈராக்கிற்கான நகல் அரசியல் யாப்பு அந்நாட்டுப் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது

(பாக்தாத்)

ஈராக்கிற்கான நகல் அரசியல் யாப்பை அந்நாட்டின் பாராளுமன்றம் நேற்று முன்தினம் நள்ளிரவு ஏற்றுக் கொண்டுள்ளது.

நகல் அரசியல் யாப்பில் இஸ்லாம் மதத்திற்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது. ஷியா முஸ்லிம்களும், குர்திஷ்களும் பெரும்பான்மையாகவுள்ள பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. மூன்று நாட்களின் பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படுமென்று சபாநாயகர் அறிவித்துள்ளார்.

இருந்த போதிலும் சதாம் ஹுசைன் காலத்தில் அரசியல் மற்றும் நிர்வாக செல்வாக்குப் பெற்றவர்களானசிறுபான்மை சுன்னி முஸ்லிம்கள் இந்த அரசியல் யாப்பையிட்டு அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் மூன்று நாட்களில் இடம்பெறவிருக்கும் வாக்கெடுப்பின் போது இந்த அரசியல் யாப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் ஒக்டோபர் மாதத்தில் இடம்பெறவிருக்கும் கருத்துக் கணிப்பின்போது தங்களது எதிர்பார்ப்பைத் தெரிவிக்கப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஈராக்கையே பிளவுபடுத்தக் கூடியதும், சிவில் யுத்தமொன்றுக்கு நாட்டை இட்டுச் செல்லக் கூடியதுமான இந்த அரசியல் யாப்பை நிராகரிக்கும்படி மக்கள் அனைவருக்கும் தாங்கள் வேண்டுகோள் விடுக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஈராக்கின் தேசிய சபையில் அரசியல்யாப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு வெள்ளை மாளிகை பாராட்டுத் தெரிவித்துள்ளது. ஈராக்கின் அரசியல் யாப்பு அடிப்படையிலான வழிமுறைகளில் இது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகுமென்று வெள்ளை மாளிகைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்பினைத் தயாரிப்பதற்கான கால எல்லை நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

## காஸாவிலிருந்து யூதர்கள் முற்றாக வெளியேற்றம் மேற்குக்கரையில் வெளியேற்றும் பணி ஆரம்பம்



(காஸா)

பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியிலிருந்து நேற்று முதல் இஸ்ரேலியர்கள் வெளியேற்றப்படுவதால் அங்கு பதற்றம் அதிகரித்துள்ளது. பலஸ்தீனத்திற்குட்பட்ட காஸா மேற்குக்கரை ஆகிய பகுதிகளில் கடந்த 38 ஆண்டுகளாக ஆக்கிர மித்து தங்கியுள்ள இஸ்ரேலியர்களை வெளியேற்றும் பணியில் இஸ்ரேல் அரசு ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே காஸா நகரில் 21 குடியிருப்புக்களில் தங்கியிருந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் பணி நிறைவு பெற்றிருந்ததையடுத்து நேற்று மேற்குக் கரைப் பகுதியிலிருந்து குடியேற்றக்காரர்களை வெளியேற்றும் பணி ஆரம்பமாகியுள்ளது. இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு அப் பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் அங்கு படைகள் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வெளியேற்றும் பணி முடிவடைந்ததும் இப் பகுதிகளை இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கும்



## சட்டவிரோதிகள் சென்ற படகு மூழ்கியது 31 பேரைக்காணவில்லை, இருவர் காப்பாற்றப்பட்டனர்

கியூபாவிலிருந்து அமெரிக்காவிற்குச் சட்டவிரோதமாகக் கப்பல் மூலம் செல்வதற்கு முயற்சிகள் மேற்கொண்ட கியூப பிரஜைகளில் இரண்டு பெண்களையும் ஒரு ஆணையும் அமெரிக்க கரையோர காவல்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

மேலும் 31 கியூபாப் பிரஜைகள் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. கியூபாவின் வடபகுதியிலிருந்து 50 கிலோமீற்றர் தூரத்தில் இவர்கள் சென்ற படகு நீரில் மூழ்கியது. 14 பேர் மூழ்கிய படகைப் பிடித்தவண்ணம் இருந்தார்கள் என்றும் ஏனைய ஆறுபேர் சமுத்திர நீரில் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்றும் தெரிவித்தனர்.

கியூபாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையிலான குடிவரவு சட்டத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட கியூப பிரஜைகள் தங்களது சொந்த வீடுகளுக்கு திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படுவது வழக்கமாகும். எந்தவிதமான ஆவணங்களும் இன்றி அமெரிக்காவினுள் பிரவேசிக்கும் கியூப மக்கள் அங்கு தங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இந்த வழிமுறைகள் கியூப மக்களை சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதற்கு ஊக்கம் அளிக்கின்றன என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

## தீவிரவாதி என அப்பாவி இளைஞர் மீது தாக்குதல் ஆராய விசாரணைக்குழு பிரேசில் அனுப்புகிறது



தீவிரவாதி என நினைத்து லண்டன் பொலிசாரால் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றிய உண்மையைக் கண்டறிவதற்காக பிரேசில் விசாரணைக்குழு ஒன்றை அந்த நாட்டு அரசு இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கிறது.

கடந்த மாதம் (யூலை) ஏழாம் திகதியும் 21 ஆம் திகதியும் தீவிரவாதிகள் பாதாள ரயில் நிலையங்களில் தாக்குதல் நடத்தினர். இதில் 56 பேர் பலியானார்கள். இதைத் தொடர்ந்து தாக்குதலுக்குக் காரணமானவர்களைப் பொலிசார் தேடி வந்தனர். அப்போது தீவிரவாதி என நினைத்து பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஜீன்சார்லஸ் டிமென சிஸ்சை பொலிசார் சுட்டுக் கொன்றனர். பின்னர் அவர் அப்பாவி என்பதும், தீவிரவாதிகளுக்கும் அவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து பிரதமர் ரொனி பிளேயர் பொலிசாருக்காக மன்னிப்புக் கேட்டார். இந்த நிலையில் அரசு சட்டத்தரணி வாக்னர்கான் கால்ப்ஸ் தலைமையில் ஒரு விசாரணைக்குழுவை இங்கிலாந்துக்கு அனுப்பப் போவதாக பிரேசில் அரசு அறிவித்துள்ளது.

## இந்திய–பாக். பேச்சுக்களின் முன்னேற்றம் ஆராய வெளியுறவுச் செயலர் பாக். பயணம்

(இஸ்லாமபாத்)

இந்தியா-பாகிஸ்தான் இடையே நடக்கும் விரிவான பேச்சின் முன்னேற்றம் குறித்து விவாதிக்க, வெளியுறவு செயலர் ஷியாம் சரண், இம்மாதம் இறுதியில் பாகிஸ்தான் செல்கிறார்.

நியூயோர்க்கில் அடுத்த மாதம் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டம் நடக்கிறது. இதில் பிரதமர் மன்மோகன் சிங்கும், பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் பங்கேற்கின்றனர். அப்போது, இருதரப்பு உறவு குறித்து இருவரும் பேச்சு நடத்தவுள்ளனர். இது தொடர்பாக விவாதிக்க வெளியுறவு செயலர் ஷியாம் சரண், இம்மாதம் 31 ஆம் திகதி பாகிஸ்தான் செல்கிறார்.

அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகமது கசூரி, வெளியுறவுச் செயலர் ரியாஸ் முகமது கான் ஆகியோருடன் ஷியாம் பேச்சு நடத்தவுள்ளார். காஷ்மீர், சியாச்சின் உட்பட இருதரப்புக்கும் இடையே நடக்கும் விரிவான பேச்சில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து, அவர்களுடன் விவாதிக்கவுள்ளார்.

கராச்சியில் நடக்கும் இந்திய தூதரகத் துணை அலுவலக புதுப்பிப்புப் பணிகளையும், அவர் பார்வையிடவுள்ளார். நியூயோர்க்கில் பிரதமரும், முஷாரப்பும் நடத்தவுள்ள பேச்சின் விபரங்களும் ஷியாமின் பயணத்தின் போது முடிவு செய்யப் படுகிறது. இரு நாட்டுக்கும் இடையே நடக்கும் விரிவான இரண்டாம் கட்டப்பேச்சு, இம்மாதம் இறுதியில் முடிகிறது. தீவிரவாதம், போதைப் பொருட்கள் கடத்தல் தடுப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இதில் பேசப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இத்தாலியில் பூமியதிர்ச்சி

(ரோம்)

இத்தாலியில் ரோம் மற்றும் கடற்கரை நகரங்களில் 4.5 ரிச்டர் அளவில் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதில் முதியவர் ஒருவர் மீது இரும்பு ஏணி சரிந்து விழுந்ததில் அவர் பலியானார்.

ரோம் நகரில் பலர் வீடுகளை விட்டு வெளியேறியபோதும், பலத்த சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# உந்துருளி, ஈருருளிகளில் நீளமான பொருட்களை வீதிகளில் எடுத்துச் செல்வதற்குத் தடை

### - தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

**உந்துருளி, ஈருருளிகளில் நீளமான பொருட்களை வீதிகளில் எடுத்துச்செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதென தமிழீழ காவல்துறை நகரபோக்குவரத்துப்பிரிவுப் பொறுப்பாளர் ப.சி.சிவகுமாரன் தெரிவித்துள்ளார்.**

அவர்மேலும் தெரிவிக்கையில்; உந்துருளி, ஈருருளிகளில் நீளமான பொருட்களை எடுத்துச் செல்லும் பொழுது வீதியில் பயணிக்கும் வாகனங்கள் முதல் பாதசாரிகள் வரை பெருத்த அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளதுடன் இதன்காரணமாக வீதி விபத்துக்கள் ஏற்படகாரணமாகவும் அமைந்துள்ளது எனவே வீதி விபத்துக்கள் ஏற்படுவதனைத் தடுத்து இதனால் அனைவருக்கும் ஏற்படவுள்ள அசௌகரியங்களை நீக்கும் வகையில் மேற்படி ஊர்திகளில் நீளமான பொருட்களை எடுத்துச்செல்வதுதடை செய்யப்பட்டுள்ளதெனவும் இதனை கருத்திற்கொண்டு குறிப்பிட்ட இவ்வூர்திகளில் நீளமான பொருட்களை எடுத்துச்செல்வதனை தவிர்த்துக்கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளார்.

இதனை மீறி செயற்படுமிடத்து சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (சோ)

## மாதாந்த கூட்டம்

(கிளிநொச்சி)

கரைச்சிப்பிரதேச சபை பிரிவிலுள்ள சனசமூக நிலையகங்களின் மாதந்த கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாக கரைச்சி பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். நன் கொடை வழங்கல் தொடர்பாகவும், உள்ளூராட்சி வாரம் தொடர்பாகவும்இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

# சுகாதார விழிப்புணர்வு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமியால் பாதிக்கப்பட்டு மருதங்கேணி இடைத்தங்கல் முகாமில் வதியும் மக்களுக்கென சுகாதார விழிப்புணர்வு செயற்பாட்டினை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனமும் தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தொண்டர்களும் இணைந்து கடந்த 15ஆம் திகதியன்று மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதார விழிப்புணர்வு தொடர்பான வீடியோப்படக்காட்சியும் காண்பிக்கப் பெற்றது.

பாதிக்கப்பெற்ற மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்த மேற்படி நிகழ்வில் இடைத்தங்கல் முகாம் தலைவர், சுகாதார பரிசோதகர்,பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் ,நலவாழ்வுஅபிவிருத்தி நிறுவன ஊழியர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# வாகன சுத்திகரிப்பு நிலையங்களில் நீரை மீளச்சுத்திகரிக்க பணிப்பு

(வவுனியா)

வவுனியாவிலுள்ள வாகனசுத்திகரிப்பு நிலையங்கள் வாகனச் சுத்திகரிப்பிற்காக பயன்படுத்தும் நீரைச்சுத்திகரித்து அவற்றை மீளப்பயன்படுத்த வேண்டும் என வவுனியா அரச அதிபர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

வவுனியாவில் பல வாகன சுத்திகரிப்புநிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் சில பயன்படுத்தும் நீர் அருகிலுள்ள கிணறுகளுக்குள் கசிந்து எண்ணெய்ப்படலமாக மிதந்ததாக பொதுமக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அவ்வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. ஏனைய வாகனச் சுத்திகரிப்பு நிலையங்களில் பயன்படுத்தப்படும் நீர் வடிகட்டி சுத்திகரிக்கப்பட்டு மீளப்பயன்படுத்த வேண்டும். வடிகட்டிப் பெறப்படும் எண்ணெய்உரியமுறையில் அழிக்கப்படவேண்டும்.இந்நடை முறைகளைப் பின்பற்றாத வாகனச் சுத்திகரிப்பு நிலையங்களின் அனுமதி இரத்துச்செய்யப்பட்டு அவை மூடப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# வவுனியா மாவட்ட அபிவிருத்திக்கு 46 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்கென நிகொட் திட்டத்தின் மூலம் 46 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டமாகிய நிகொட் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கே 46 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நிதி மூலம் கல்வி அபிவிருத்தி, வீதிப்புனரமைப்பு, விவசாய நடவடிக்கைகள் போன்ற சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (10)



கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலை பின்புற வளாகத்தின் நுழைவாயிலுக்கென கடந்த வருடம் புதிதாக பொருத்தப்பட்டஇரும்புக் கதவுகள் சேதமடைந்த நிலையில் சுவர் ஓரமாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதனை படத்தில் காணலாம். (படம்-சோதி)

# எஸ்.எஸ். துரையின் "வானொலி நாடகம்" நூல் வெளியீட்டு விழா நிகழ்வு

(அலுவலகசெய்தியாளர்)

கனேடியத் தமிழ் வானொலி (கனடா) நாடகத் தயாரிப்பாளர் எஸ்.எஸ். துரையின் வானொலி நாடகம் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் அன்றையதினம் பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கலை இலக்கிய ஆர்வலர்களின் அனுசரணையுடன் இவ் வானொலி நாடக நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# இடைத்தங்கல் முகாமில் கால் நடைகள் தொல்லை!

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு வட்டுவாகல் இடைத்தங்கல் முகாமில் கட்டாக் காலிகால்நடைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்வதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகள் வீட்டினுள் புகுந்து உணவுப் பொருட்களை சாப்பிடுவதுடன் பொருட்களையும் சேதப்படுத்துவதாக மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பிலும், கட்டாக்காலிகால்நடைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது.

இதனால் வீதி விபத்துக்கள் தினமும் இடம்பெறுகின்றன. இதனால் உயிர் ஆபத்துக்கள் கூட ஏற்பட நிறைய வாய்ப்புண்டு..

எனவே இவ் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து செயற்பட வேண்டுமென பொதுமக்கள் கேட்டுள்ளனர். (08)

# நிகொட் திட்டத்தின் கீழான அபிவிருத்திக்கு செல்வபுரம் கிராமத்தில் தேவைப்பகுப்பாய்வு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்றாவதாகத் தெரிவு செய்யப்பட்ட பின்தங்கிய கிராமமான செல்வபுரம் கிராமத்திற்கு நிகொட்திட்டத்தின்கீழ் 50 இலட்சம் ரூபாய் நிதியுதவியுடன் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வதற்கான தேவைகள் பகுப்பாய்வு நிகழ்வு செல்வபுரம் கிராம மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ம. ஜெகு தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கருத்துரைகளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.ரவிகரன்.சமூக சேவை உத்தியோகத்தர் க.குணசிங்கம், நிர்வாக சேவை உத்தியோகத்தர் ,சிவரூபன்,நிகொட்உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.ரவி, மாவட்ட சமுதாய அபிவிருத்தி இணைப்பாளர் அ.சுதர்சன், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இலக்கியன் ஆகியோர் வழங்கினர்.

இத் திட்டத்தின் மூலம் செல்வபுரம் கிராமத்திற்கு பொது நோக்கு மண்டபம், வாய்க்காலுக்கான பாலங்கள் அமைத்தல், கிராமத்தின், சிறு வீதிகள் அமைத்தல், பொதுக்கிணறுகள் என்பன இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் கிராமத்தின் வரைபடங்கள் மூலம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்கின்ற இடங்களைத் தெரிவு செய்து அப் பிரதிநிதிகளினால் மக்களுக்குவிளக்கம் அளிக்கப்பட்டது.

அத்துடன் கிராம புனரமைப்பு குழுத் தெரிவுகளும் இடம்பெற்றது. தலைவர் த.இராசரட்ணம், செயலாளர்,க. உத்தம புத்திரன், உப செயலாளர் சிறி.துஷாஜினி உப தலைவர் ஆ.சந்திரதாசன் ஆகியோருடன் ஆறு உறுப்பினர் தெரிவுகளும் இடம்பெற்றன. இத்திட்டத்தின் சிறந்த பயனாளிகளுக்கு கடனுதவிகளும் வழங்கப்படவுள்ளன.இந் நிகழ்வில் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் சனசமூக நிலையத்தின் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மக்கள்,அரச அரச சார்பற்ற பிரதிநிதிகள் , போராளிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (24)

# விசுவமடு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

(விசுவமடு)

விசுமடு படித்த வாலிபர் திட்டத்திலுள்ள ஏற்று நீர்ப்பாசனத் திட்ட விவசாயிகளுக்கு மூன்றரை இலட்சம்ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் விசுவமடு, தொட்டியடி "பம்போஸ்" நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தி வைக்கப்பட்ட இடத்தில் நீர் இறைக்கும் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வும் இயந்திரத்தை இயக்கி வைக்கும் நிகழ்வும், த.பொ. மே நிறுவன திட்ட ஆலோசகர் கி.ஆறுமுகம் தலைமையில் ஆரம்பமானது.

நிகழ்வின் மங்கல விளக்கினை ஜேர்மன் நாட்டில் வசிக்கும் திருமதி அ.குழந்தை வடிவேல் சறோசா, கிளிநொச்சி மாவட்ட பெண்கள் மேம்பாட்டு குழுத்தலைவர் திருமதி தேவாம்பிகை காசிநாதன்ஆகியோரும் ஏற்றி வைத்தனர்.

நிகழ்வு அகவணக்கத்துடன் ஆரம்பமானது இதனைத் தொடர்ந்து தண்ணீர் இறைக்கும் பம்பியை ஜேர்மன் நாட்டில் வசிப்பவராகிய அ.குழந்தைவடிவேலும், தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினமும் இயக்கிவைத்தனர்' ஜேர்மன் நாட்டு மக்களின் இரண்டாம் கட்டநிதி உதவியில் இந்த நீர் இறைக்கும் இயந்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கான ஒழுங்கமைப்பை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

1971 ஆம்ஆண்டு விசுவமடு படித்த வாலிபர் திட்டம் என்ற பெயரில் ஆரம்பித்த இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தால் பாரிய சேதத்திற்குள்ளாக்கப்பட்டது. 1988ஆம் ஆண்டு சிறிலங்காஅரசால் முற்றாக இடை நிறுத்தப்பட்ட நிலையில் விவசாயிகள் பயிர்ச் செய்கைக்காக பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

அப்போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இத் திட்டத்தைப் பொறுப்பேற்று நீர்ப்பாசனப் பம்பிகளை இயக்கி நீர்ப்பாசனம் மேற்கொள்வதற்காக ஒத்துழைப்பை முழுமையாக வழங்கி வந்தது.

ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் 210 விவசாயக் குடும்பங்களுக்கு குடியிருப்பு நிலம் ஒரு ஏக்கரும் பயிர்ச்செய்கை நிலம் இரண்டு ஏக்கரும் வழங்கப்பட்ட நிலையில், த.பொ.மே.நிறுவனம் இத் திட்டத்திலுள்ள விவசாயிகளை ஒன்றிணைத்து ஏற்று நீர்ப்பாசனச் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தை அமைத்து வழிநடத்தியது. தற்போதைய சூழ்நிலையில் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த முடியாத நிலையில் உற்பத்தியாளர்கள் பலர் உற்பத்தியைக் கைவிடத் தொடங்கியதாலும் இயந்திரத் தொகுதிகளை கவனிக்காமல் விட்டதாலும், மீண்டும் ஏற்று நீர்ப்பாசனத்தில் பின்னடைவைச் சந்தித்தது உற்பத்தியில் ஊக்கம் உடைய பல விவசாயிகளினால் -தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து த.பொ.மே. நிறுவனமும். தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினத்தின் முயற்சி காரணமாகவும் அரசியல்துறையினரின் ஆதரவுடனும் ஜேர்மன்நாட்டில் புலம்பெயர்ந்துள்ள மக்களும் ஜேர்மன் நாட்டு மக்களும் ஒன்று சேர்ந்து சேர்த்த நிதியில் ஒரு பகுதியை செலவுசெய்து நீர் இறைக்கும் பம்பியை அன்பளிப்பு செய்துள்ளனர். (46)



எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சிநாள் தொடர்பாக கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவன தமிழ்பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளதனை படத்தில் காணலாம். (படம்:சோதி)

# வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இரண்டு விகாரைகள் படையினரால் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் வடக்கு பகுதியில் படையினரின் உயர்பாதுகாப்பு வலய எல்லைக்குள் பௌத்தமதவழிபாட்டு சின்னமான இரண்டு புதிய விகாரைகள் அமைக்கப்பட்டு கடந்த 19ஆம்திகதி அவை திறந்துவைக்கப்பட்டுள்ளன.**

மாதகல் பகுதியில் அமைக்கப்பட்ட "தம்பலோகபதுன" என்ற விகாரையில் படையினரால் புதிதாக தாதுகோபம் அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்று பலாலி இராணுவ வைத்தியசாலையில் புத்த கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவையிரண்டும்கடந்த பௌர்ணமி தினமான 19 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டன இந்த திறப்பு விழாவில் கடற்படைத் தளபதியும் கூட்டுப்படைகளின் தளபதியுமான வைஸ்அட்மிரல் தயாசந்தகிரி உட்பட இராணுவத் தளபதிகளும், கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தமிழ்தாயகப்பிரதேசத்தில்பௌத்த வழிபாட்டு சின்னங்களை சிங்கள பேரினவாதிகள் திட்டமிட்டு அமைத்து வருகின்றனர். தமிழ்தாயகப்பகுதியை உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறி ஆக்கிரமித்துள்ள படையினர் அங்கு புத்தவிகாரைகளை அமைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# முகமாலை பாரவூர்த் சோதனைச் சாவடியில் படையினர் கெடுபிடி; ஊழியர்கள் வெளியேற்றம்

(தென்மராட்சி)

முகமாலை சிறிலங்கா இராணுவச் சோதனைச் சாவடியில் அமைந்துள்ள பாரவூர்திகளில் இருந்து பொருட்களை இறக்கும் இடத்தில் சிறிலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்டகெடுபிடிகளை அடுத்து பொருட்களை ஏற்றி இறக்கும் ஊழியர்கள் தமது வேலைகளை இடைநிறுத்திவிட்டு நேற்று முற்பகல் வெளியேறிவிட்டதாகத் தெரியவருகிறது.

இங்கு கடமை புரியும் கட்டளை அதிகாரியும் படையினரும் இங்கு பணிபுரியவரும் கூலித்தொழிலாளர்களை இனகுரோததன்மையுடன் அணுகியதை அடுத்தே அவர்கள் தமது பணிகளை இடைநிறுத்திவிட்டு வெளியேறியுள்ளனர். நேற்று ஊழியர்கள் வேலைகளை இடைநிறுத்தியதால் பெருந்தொகையில் பாரவூர்திகள்இங்குநிறுத்தப்பட்டு இருப்பதாகத் தெரியவருகிறது. (28)

# பொலிஸ் நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு; முறைப்பாட்டுக்குச் செல்வதில் பொதுமக்களுக்கு சிக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள சிறிலங்காப் பொலிஸ் நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடு செய்யச் செல்வதில் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசர காலச் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கு பின்னர் யாழ். குடாநாட்டில் உள்ள பதின்நான்கு பொலிஸ் நிலையங்களுக்கும் இராணுவமே பாதுகாப்பை வழங்கி வருகின்றது. இதனால் முறைப்பாடுகள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்குச் செல்ல மக்கள் அச்சமடைகின்றனர். அத்துடன் முறைப்பாடுகள் பொலிசாரினால் ஏற்றுக் கொள்ளப்படாமல்பொதுமக்களை அலைக் கழிக்கின்றனர். மக்கள்செய்யும் முறைப்பாடுகளுக்குசரிவர பதிலளிக்கபொலிசார்மறுத்துவருவதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (28)

# மானிப்பாய் கலாசார மண்டபத்தில் கலை இலக்கிய பெருவிழா

(வலி-மேற்கு)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் கலை இலக்கியப் பெருவிழா இம் மாதம் 27,28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வலிமேற்குப் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் கலை இலக்கிய பெருவிழா நடைபெறவுள்ளது.

மானிப்பாய் கலாசார மண்டபத்தில் இரு தினங்கள் நடைபெறவுள்ள இக்கலை இலக்கியப் பெருவிழாவில், நாட்டுக்கூத்து, கிராமியநடனம், நாட்டிய நாடகங்கள், நாடகங்கள், இன்னிசை ஆகிய பலவித சகல நிகழ்வுகளும் இடம்பெறவிருப்பதாக பிரதேச செயலாளர் தெரிவிக்கின்றார்.

வலிதென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு துறைசார்ந்த கலைஞர்களும் இவ்விழாவில், பாராட்டிக்கௌரவிக்கப்படவிருக்கின்றனர். (32)

# அல்லைப்பிட்டி, வல்லைப் பகுதிகளில் பயணிகள் மீது படையினர் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- தீவகம்பிரதான தரைவழிப் பாதையில் உள்ள அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியிலும், யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதியிலுள்ள வல்லை வெளிப் பகுதியிலும் பயணிகள் மீதான கெடுபிடிகளை இராணுவத்தினர் அதிகரித்துள்ளனர்.

இதன் காரணமாக இச் சோதனைச் சாவடியூடாகச் செல்வதற்கு பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சோதனைச் சாவடியூடாகச் செல்வோரை இதுவரை காலமும், சாதாரணமாகவே சோதனை செய்து வந்த படையினர் கடந்த சில தினங்களாக பயணிகளை கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக இளைஞர்,யுவதிகளை தனிமையில் அழைத்துச் சென்று உடற்பரிசோதனையும் செய்கின்றனர். அத்துடன் கடுமையான விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்தசிலதினங்களாக இராணுவத்தினர் இரவு வேளைகளிலும், பகலிலும், மேற்கொள்ளும் இந்த திடீர்நடவடிக்கைகளால் வாகன ஓட்டுனர்,நடத்துனர் மற்றும் பயணிகளிடையே பீதி ஏற்பட்டுள்ளது. (33)

# படையினரின் நடவடிக்கையால் பாடசாலை புனரமைப்புகள் தாமதம்

## -கல்வித்திணைக்கள அதிகாரிகள் குற்றச்சாட்டு

(வடமராட்சி)

சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடமராட்சி கிழக்குப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் பணிகள், படைத்தரப்பின் கெடுபிடிகளால் பின்னடைவுகளை சந்தித்து வருவதாக கல்வித்திணைக்கள அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளை மீளக் கட்டியெழுப்புவதிலேயே இப் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. முற்றாக அல்லது பகுதியாக அழிந்துள்ள பாடசாலைகளில், கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க ஏதுவாக தற்காலிக தகரக்கொட்டகைகளினை அமைத்து வழங்க யுனிசெப் அமைப்பு நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளது.

எனினும் இவ்வேலைகளிற் கென தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள், குடாநாட்டிலிருந்த வேலை தளங்களுக்கான மூலப்பொருட்களை எடுத்துச்செல்ல முகமாலை இராணுவ சோதனைச்சாவடியில் வைத்து படைத்தரப்பு தடைகளைப் போட்டு வருகின்றது. இதனால் நிர்மாணப் பணிகள் பெரிதும் தடைப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக சீமெந்து, இரும்புப் பொருட்கள் மற்றும்மின்பிறப்பாக்கிகள் என்பவற்றை முகமாலையூடாக எடுத்துச்செல்ல அனுமதி மறுக்கும் படையினர் பலசந்தர்ப்பங்களில் அவற்றைத்திருப்பியனுப்பியுள்ளதாகவும் ஒப்பந்தகாரர்களால், கல்விப்பணிப்பாளரது கவனத்திற் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதையடுத்து,இவ்விடயம் தொடர்பாக யாழ்.அரசஅதிபருடாக,யாழ். மாவட்டபடைத்தலைமையின் கவனத்திற்கு கல்வித்திணைக்கள அதிகாரிகள் கொண்டு சென்றுள்ளனர். (27)

# நாவற்குழி பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வு

(வலிமேற்கு)

நாவற்குழி -இறால் பதனிடல் தொழிற்சாலைக்கு அண்மையிலிருக்கும் காணிகளில் சட்ட விரோதமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கன்ரர் வாகனம், உழவு இயந்திரம் மற்றும் இரு சக்கர உழவு இயந்திரம் போன்ற வாகனங்களில் மண் அகழ்ந்து ஏற்றிச் செல்லப்படுவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

யா/யா/5095 திருமதி.பவளேஸ்வரி மயில்வாகனம்.
யா/யா/5112 திரு.பொன்னுத்துரைக்குருக்கள் முத்துக்குமார சாமிக்குருக்கள்
யா/யா/5123 திருமதி.நாகேஸ்வரி நடராசா.
யா/யா/5130 திரு.பொன்னையா சண்முகவேல்.
யா/யா/5141 திரு.நாராயணசிங்கம் முத்துலிங்கம்.
யா/யா/5147 திரு.ஆறுமுகம் குமாரசாமி.
யா/யா/5153 திரு.இராசையா சிந்துராஜா.
யா/யா/5193 திருமதி.சரஸ்வதி கந்தசாமி.
யா/யா/5203 திருமதி.பூமணி அப்புத்துரை.
யா/யா/5225 திரு.செல்லையா இராசேந்திரம்.
யா/யா/5231 திரு.பொன்னுச்சாமி திருநாவுக்கரசு.
யா/யா/5241 திருமதி.சரஸ்வதி அருட்பிரகாசம்.
யா/யா/5245 திருமதி.கமலாதேவி சோமசுந்தரம்.
யா/யா/5264 திருமதி.கனகம்மா தம்பிராசா.
யா/யா/5268 திருமதி.இம்மானுவேல் றூபி அக்னஸ்.
யா/யா/5269 திருமதி.திரேசா செல்வம் அன்ரனி.
யா/யா/5281 திரு. சுந்தரம் நாரயணசுவாமி.
யா/யா/5282 திரு. டானியல் நேசராசா பீடில்.

தொடரும்...

# வடக்கு கிழக்கு மாகாணசபை

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டம்

## நீக்கோட்-II

### மன்னார் மாவட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல 2168 SRI(SF)

# கேள்வி அறிவித்தல் இல-01

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01 வடக்கு, கிழக்கு சனசமூக புனருத்தாரண, அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நீக்கோட் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரம்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் நீக்கோட் கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக மன்னார் மாவட்டக் கேள்விச்சபையின் தலைவர் பின்வரும் ஒப்பந்த வேலைக்கு தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

*அட்டவணை*

| இல | ஒப்பந்த இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | மன்/நீகோட்-11/ஈடி/01 | மன்/தலைமன்னார் பியர் அ.த.க பாடசாலைக்கு 110'X5' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் அமைத்தல். | M 6 கட்டட நிர்மாணம் | 63,600/= |
| 02 | மன்//நீகோட்-11/ஈடி/02 | மன்/அல்-அஸ்ஹார்மகாவித்தியாலயத்திற்கு 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் புனரமைத்தல். | M 6 கட்டட நிர்மாணம் | 60,700/= |
| 03 | மன்//நீகோட்-11/ஈடி/03 | மன்/புனித வளனார் றோ.க.த வித்தியாலயத்திற்கு 110'X25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் அமைத்தல். | M 6 கட்டட நிர்மாணம் | 65,000/= |
| 04 | மன்//நீகோட்-11/ஈடி/04 | மன்/முள்ளிக்குளம் றோ.க.த.க வித்தியாலயத்திற்கு 40'X28' ஆசிரியர்களுக்கான விடுதி அமைத்தல். | M 7 கட்டட நிர்மாணம் | 30,500/= |
| 05 | மன்//நீகோட்-11/ஈடி/06 | மன்/இலுப்பைக்கடவை அ.த.க.பாடசாலையில் ஆசிரியர்களுக்கான விடுதித் தொகுதிஅமைத்தல். | M 6 கட்டட நிர்மாணம் | 55,400/= |
| 06 | மன்//நீகோட்-11/ஈடி/07 | மன்/சின்ன வலயன்கட்டு அ.த.க.பாடசாலையில் ஆசிரியர்களுக்கான விடுதித் தொகுதிஅமைத்தல். | M 7 கட்டட நிர்மாணம் | 32,500/= |
| 07 | மன்//நீகோட்-11/எச்.எஸ்/01 | மன்னார் மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரிக்கான அலுவலகக் கட்டடம்அமைத்தல் | M 6 கட்டட நிர்மாணம் | 60,000/= |
| 08 | மன்//நீகோட்-11/ஏஜி/01 | பாலம்பிட்டி கமநல கேந்திரநிலையத்துடனான உரக் களஞ்சியம் மற்றும் வாகனத் தரிப்பிடம் என்பன புனரமைத்தல். | M 7 கட்டட நிர்மாணம் | 24,000/= |
| 09 | மன்//நீகோட்-11/ஐடி/01 | வானிலை அவதான நிலையத்திற்கான இரண்டு மாடிக் கட்டடமும், இரண்டு விடுதிகளும் அமைத்தல். | M 6 கட்டட நிர்மாணம் | 92,000/= |
| 10 | மன்//நீகோட்-11/ஆர்டி/01 | கல்பதித்துத் தார் ஊற்றுதல் உயிலங்குளம் ஆள்காட்டிவெளி வீதி (0.90 கி.மீ) | M 6 வீதிநிர்மாணம் | 52,000/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ள சகல ஒப்பந்தகாரர்களும் கூறுவிலைகோரலாம்.

I நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட துறைசார் தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("ICTAD" ல் மேற்படி M 7க்கு மேலான பதிவு பெற்றவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.

III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/ அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.

IV இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகள் அல்லது திருப்திகரமற்ற வேலைகள் என்னும் காரணங்களுக்காக தகுதியற்றவர் என பிரகடனப்படுத்தப்பட்டவர்.

VI கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் நாளது திகதிவரை புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04 இதன் தொடர்பாக பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கூறுவிலையிட முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமைய வேண்டும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டத்தின் (நீக்கோட்) கீழ் தற்பொழுது செயற்படுத்திக் கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவல்களை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டம் (நீக்கோட்) மன்னார் அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்வி சம்பந்தமான ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம். தொலைபேசி:- 023-223103, தொலை நகல்:- 023-2233103, ஈமெயில்:dislmnr @sltnet.lk

06 கேள்வி ஆவணங்களை 24.08.2005 இருந்து 08.09.2005 வரை காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து ரூபா 1000 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07 முன்கூட்டிய கேள்விக் கூட்டமொன்று 08.09.2005 மாலை 3.00 மணிக்குக் கச்சேரியில் நடைபெறும்.

08 கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்வி விலையையும் கேள்விவிலை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் பந்தி 9இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.


09 பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, நீக்கோட், மாவட்ட திட்ட அலுவலகம், கச்சேரி, மன்னார் என்ற விலாசத்திற்கு 13.09.2005 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

10 கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக விளங்க மாட்டார்.

வே.விசுவலிங்கம்,
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,
நீக்கோட் திட்டம், மன்னார்.

(சி.12567)

# வீரர்களின் வாழ்க்கையில் காயங்களும் ஒரு பகுதியே




முழங்கைக் காயம் நான் எதிர்பார்த்ததைவிட, வேகமாகக் குணமாகிறது. கடந்த வாரம் துடுப்பாட்டப் பயிற்சி தொடங்கிய போது, ஆறு - ஏழு ஓவர்கள் மட்டுமே பயிற்சி செய்ய முடிந்தது. இப்போது கால அளவை அதிகரிக்க என்னால் முடிகிறது. மிக நீண்ட நேரம் நின்று விளையாடும் அளவுக்கு என்னைத் தயார்ப் படுத்த வேண்டும் என்கிறார் சச்சின் டெண்டுல்கர்.

காயம் முழுவதும் குணமான பின்னர், அனைவருக்கும் திருப்தியாக இருந்தால் மட்டுமே, மீண்டும் அணிக்குத் திரும்பு வேன். விரைவாக அணிக்குத் திரும்புவதைவிட, முழுத் தகுதியுடன் திரும்புவதே முக்கியம். விளையாட்டு வீரர்கள் வாழ்க்கையில் காயங்களும் ஒரு பகுதி. அதைத் தடுக்க முடியாது. அதனுடன் இணைந்து வாழப் பழகிக் கொண்டேன் இவ்வாறு தெரிவித்துள்ளார் சச்சின்.

“சச்சின் என்றாலே... ஆக்ரோஷமான அதிரடி ஆட்டம் நினைவுக்கு வரும். முன்போல இப்போது அதிரடியைப் பார்க்க முடிவதில்லையே... ஏன்?'' -இந்தக் கேள்வியை சச்சினிடமே கேட்டபோது, “நான் அணியில் நுழைந்தபோது, நின்று விளையாட வெங்சாக்கார், ரவி சாஸ்திரி இருந்தார்கள். பின்னர் அசார், சித்து வந்தனர். நான் தைரியமாக அடித்து விளையாடினேன். இப்போது இளைய தலைமுறை வீரர்கள் சேவாக், யுவராஜ் வந்து விட்டனர். நான் சீனியர் என்பதால், நின்று விளையாட வேண்டிய பொறுப்பு வந்துவிட்டது,'' என்றார்.

# 20இற்கு 20 சம்பியன் கோப்பையை எயார் இந்திய அணி கைப்பற்றியது



இந்தியாவின் முதல் 20 இற்கு 20ஓவர் கிரிக்கெட் சம்பியன் கோப்பையை எயார் இந்திய அணி கைப்பற்றியது. இறுதிப் போட்டியில் கர்நாடக கிரிக்கெட் சங்க அணியை ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நவீன கிரிக்கெட் எனப் புகழப்படும் ‘20 இற்கு 20' போட்டிகள் இந்தியாவில் முதல் முறையாக பெங்களூரில் நடந்தன. பிராட்மன் கோப்பைக்கான இத்தொடரில் ஆறு அணிகள் பங்கேற்றன. இதில் எயார் இந்தியா, கர்நாடக கிரிக்கெட் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின. கடந்த ஞாயிறு நடந்த இப்போட்டி மழை காரணமாக 17 ஓவர்கள் கொண்ட தாகக் குறைக்கப்பட்டது.

முதலில் ஆடிய கர்நாடக அணி 17 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 117 ஓட்டம் எடுத்தது. அதிகபட்சமாக அகில் 20 பந்துகளில் 25 ஓட்டம் விளாசினார். அடுத்து துடுப்பாடிய எயார் இந்தியா முதல் பந்திலேயே பட்டேல் (0) விக்கெட்டைப் பறிகொடுத்தது. இதன்பின் ஓஜா, தலைவர் சுரேஷ் ரெய்னா இணைந்து விளாசத் தொடங்கினர். இந்த ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்கு 95 ஓட்டங்கள் சேர்த்தது. ரெய்னா 37 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய ஓஜா அரைச்சதம் அடித்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இவர் 50 பந்துகளில் 66 ஓட்டம் குவித்தார். இதில் இரண்டு சிக்சர், ஐந்து பவுண்டரிகள் விளாசினார். இதன் மூலம் எயார் இந்தியா அணி 16 ஓவரில் நான்கு விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

# ஆஷஸ். நான்காவது டெஸ்ட் நாளை அவுஸ். அணியில் புதிய வேகம் இணைகிறது




ஆஷஸ் தொடரின் நான்காவது டெஸ்டுக்கான அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஷோன் டைட் இடம்பெறுகிறார்.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் தற்போது ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் மோதி வருகின்றன. இந்த இரண்டு அணிகளுக்கிடையே நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் நாளை டிரெண்ட் பிரிட்ஜில் நடக்கவுள்ளது. இப்போட்டிக்கான இங்கிலாந்து அணியில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. அவுஸ்திரேலிய அணியில் மட்டும் சில மாற்றங்கள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிளெஸ்பி அணியில் இருந்து நீக்கப்படுகிறார். இவருக்குப் பதிலாக 22 வயதான வேகப்பந்துவீச்சாளர் ஷோன் டைட் இடம்பெறுகிறார். இவர் நார்த்தாம்டன்ஷயர் அணிக்கு எதிரான இரண்டு நாள் பயிற்சிப் போட்டியில் இரண்டு வீரர்களைக் காயப்படுத்தி விட்டாராம். டிம்ராபர்ட்ஸ் என்ற வீரருக்கு இடதுகண் ஓரத்தில் ஐந்து தையல்களாம். ‘இது ஒன்று போதுமே இவரை அணியில் சேர்க்க' என்கிறார் பயிற்சியாளர் ஜோன் புக்கானன்.

‘துடிப்பும், வேகமும் கொண்ட இவருடன் இணைந்து பந்து வீசக் காத்திருக்கிறேன்' என்று மெக்ராத்தும் கூறிவிட்டார். நான்காவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வீரர்கள் எதற்கும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

# கிம்கிளிஸ்டர்ஸ், பெடரர் சம்பியன்



ரோஜர்ஸ் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஜஸ்டின் ஹெனினை வீழ்த்தி கிம் கிளிஸ்டர்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றார்.

ரோஜர்ஸ் கோப்பை பெண்கள் டென்னிஸ் போட்டி கனடாவின் டொராண்டோ நகரில் நடந்தது.

இதன் இறுதி ஆட்டத்தில் நான்காம் நிலை வீராங்கனையும் பெல்ஜியத்தைச் சேர்ந்தவருமான ஜஸ்டின் ஹெனின், சக நாட்டைச் சேர்ந்த கிம்கிளிஸ்டர்சை எதிர்த்து ஆடினார்.

ஆட்டத்தின் தொடக்கம் முதலே ஹெனின் பதற்றத்துடன் ஆடினார்.

இதில் கிம்கிளிஸ்டர்ஸ் 7-5,6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

இதேவேளை,சின்சினாடியில் நடந்த மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீரரான ரோஜர்பெடரரும் ஐந்தாம் நிலை வீரருமான அன்டி ரிராடிக்கும் மோதினார். இதன் முதல் செட்டை பெடரர் எளிதாகக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில் ரொட்டிக் சுதாரித்துக் கொண்டு ஆடியதால் இரு வீரர்களும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றனர்.எனினும் இரண்டாவது செட்டையும் பெடரரே கைப் பற்றினார் இதில் ரோஜர் பெடரர் 6-3, 7-5என்ற செட் கணக்கில் அன்டி ரொடிக்கைத் தோற்கடித்து சம்பியன் பட்டத்தைத்தட்டிச் சென்றார்.

# டென்னிஸ் தரவரிசை ஷரபோவா முதலிடத்தில்



டென்னிஸ் தரவரிசை பட்டியலில் மரியாஷரபோவா முதல் இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளார்.

கடந்த 2004இல் விம்பிள்டன் தொடரில் சம்பியன் பட்டம் வென்று டென்னிசில் தடம்பதித்தவர் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, இதையடுத்து பல்வேறு சர்வதேச தொடர்களில் கோப்பை வென்று சாதித்தார். தற்போது முதல் முறையாக சர்வதேச தரவரிசை பட்டியலிலும் முதல் இடம் பிடித்துள்ளார். நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட இப் பட்டியலில் ஷரபோவா நான்கு ஆயிரத்து 452 புள்ளிகள் பெற்று அமெரிக்காவின் லின்சே டேவன்போர்ட்டை பின்னுக்குத் தள்ளி முதல் இடத்தைக் கைப்பற்றியுள்ளார்.

18 வயதாகும் இவர் தரவரிசைப்பட்டியலில் முதலிடம்பெறும் முதல் ரஷ்ய வீராங்கனை என்ற சாதனையும் படைத்துள்ளார். தவிர, குறைந்த வயதில் முதலிடம் பெறும் ஐந்தாவது வீராங்கனை என்ற பெருமையும் பெற்றுள்ளார்.

# உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழகம் நடாத்தும் அமரர் பத்மேஸ்வரன் (சிவா) ஞாபகார்த்த கால்பந்துப் போட்டி

உருத்திரபுரம் உழவர்ஒன்றிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் அமரர் இராசகதிரவேலு பத்மேஸ்வரன் (சிவா) ஞாபகார்த்த ஒன்பது பேர் கொண்ட கால்பந்துச் சுற்றுப்போட்டி நாளை கழக மைதானத்தில் திட்டமிட்டபடி ஆரம்பமாகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த 25 அணிகள் பங்கேற்கும் மேற்படி போட்டியில் முதல்நாள் ஆட்டத்தில் 12 போட்டிகள் நடைபெறவுள்ளது இதில் ஒன்பது போட்டிகள் நேரடியாகவும் மிகுதி மூன்று போட்டிகள் வெற்றி பெறும் அணியுடனும் நடைபெறவுள்ளது. போட்டிவிபரம் வருமாறு சந்திரோதயா அணியை எதிர்த்து உருத்திரபுரம் பச்சை அணியும், கனகபுரம் அணியை எதிர்த்து இளந்தளிர் அணியும், ஸ்கந்தா பீ அணியை எதிர்த்து சந்திரோதயா ஏ. அணியும்,நண்பர்கள் மத்திய ஏ அணியை எதிர்த்து சோலை அணியும், இளந்தளிர் ஏ. அணியை எதிர்த்து இளைஞர்வட்ட அணியும், சிவநகர் பாடசாலை அணியை எதிர்த்து நண்பர்கள் மத்திய பீ அணியும், ஜோலிபோய்ஸ் பீ அணியை எதிர்த்து உதயதாரகை அணியும், பிறைக்சன் ஏ. அணியை எதிர்த்து இளந்தளிர் அணியும், மோதவுள்ளன. நாளை காலை எட்டு மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். மத்தியஸ்தரின் தீர்ப்பே இறுதியானதாம்.



காயம்பரா நகரில் நடந்த போர்த்துக்கல் லீக்கால்பந்து போட்டியில், பென்பிகா அணி வீரர்லூய்சா (வலது) அகடமிகா வீரர்மாசெல் இருவரும் பந்தை தட்டிச் செல்ல போராடுகின்றனர். இந்தப் போட்டியில் இரு அணிகளும் கோல் அடிக்காததால் சமநிலையில் முடிந்தது.

## 83 ஆவது கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு பூநகரி இணைச்சங்கங்கள் நடாத்தும் விளையாட்டுப் போட்டி

83 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தினை முன்னிட்டு பூநகரி ப. நோ கூ. சங்கம், பூநகரி கடற்றொழிலாளர் கூ. சங்கங்களின் சமாசம், பூநகரி ப.தெ.வ.கூ. சங்கம் இணைந்து விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் நடாத்தும் விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: முகாமையாளர், எரிபொருள் நிலையம், பூநகரி.ப.நோ கூ.சங்கம், நாச்சிக்குடா. பொது முகாமையாளர் பூநகரி ப.நோ.கூ.சங்கம் வாடியடி கால்பந்து, இரு பாலாருக்குமான மரதன் ஓட்டம், இருபாலாருக்குமான உந்துருளி ஓட்டம். நீச்சல் போட்டி, படகோட்ட போட்டி, மரமேறல் போட்டி என்பனவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

பூநகரி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கழகங்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## முன்பள்ளிகளின் பெருவிளையாட்டு

உடையார்கட்டு, விசுவமடு பிரதேச முன்பள்ளி சிறார்களுக்கான பெரு விளையாட்டு விழா கடந்த 17 ஆம் திகதி 3.00 மணிக்கு உடையார்கட்டு மகாவித்தியாலய மைதானத்தில் பிரதேச முன்பள்ளிகளின் தலைவர் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இப்பெருவிளையாட்டு விழாவில் உடையார்கட்டு , விசுவமடு பிரதேசங்களைச் சேர்ந்த பதினாறு முன்பள்ளிகளைச் சேர்ந்த பலநூற்றுக்கணக்கான சிறார்கள் கலந்துகொண்டனர் இங்கு பல விளையாட்டு நிகழ்வுகள், பலசுற்று இசைவும் அசைவும் நிகழ்வு, வினோத உடைப் போட்டி என்பன இடம்பெற்று பார்வையாளர்களைக் கவர்ந்திருந்தது. (19)




## விளையாட்டு

### இங்கிலாந்து பெண்கள் அணிக்கு இரண்டு ஓட்ட வெற்றி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று நாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்துப் பெண்கள் கிரிக்கெட் அணி இரண்டு ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அவுஸ்திரேலியா- இங்கிலாந்து பெண்கள் அணிகள் இடையேயான ஐந்து ஒருநாள் கிரிக்கெட்போட்டி கொண்ட தொடரில் முதல் இரண்டு ஆட்டத்திலும் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது.



ஒட்டுசுட்டான் பிரதேச கருவேலங்கண்டல் அகஸ்ரின் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வில் உறுதி எடுக்கும் முன்பள்ளி சிறார்கள். (15)



## சிந்தனைக்கு

விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி

தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 24.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஆக்கிரமிப்புச் சின்னங்கள்!

சிங்கள ஆயுதப் படையினர் தமிழர் தாயகப் பகுதியில் பௌத்த விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் அமைப்பது ஒன்றும் வழிபாட்டிற்கான வணக்க ஸ்தலங்கள் என்ற ரீதியிலோ அன்று வழிபாட்டிற்கான சின்னங்கள் என்ற அடிப்படையிலோ அல்ல. அவை ஆக்கிரமிப்பின் சின்னங்களாகவே அமைக்கப் படுகின்றன, பாதுகாக்கப்படுகின்றன.

அதாவது தமிழர் தாயகத்தில் வாழும் எந்த மத மக்கள் கூட்டமும் தாம் வாழும் இடங்களில் வழிபாட்டுச் சின்னங்களை அமைத்தல் சிலைகளை வைத்தல் என்பது தவறில்லை, ஆனால் ஆக்கிரமிப்பாளர்களாகச் செயற்படும் சிறிலங்கா இராணுவம், ஆக்கிரமிப்பை உறுதி செய்வதற்கான சின்னங்களாகப் பௌத்த சின்னங்களை அமைப்பது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதோ, அன்றி நியாயப்படுத்தத்தக்கதோ அல்ல.

இந்தவகையில், தமிழர் தாயகத்தில் அமைக்கப்படும் பௌத்த சின்னங்கள் ஆக்கிரமிப்புச் சின்னங்கள் என்பதில் எந்தவிதத்திலும் சந்தேகம் இல்லை. அண்மைய அரசியல் வரலாறும் இதனையே வெளிப்படுத்துபவையாகவுள்ளன. இந்நிலையில் புதிதாக பௌத்தசின்னங்களை நிறுவுதல் என்பது மதவழிபாட்டிற்கு அப்பால் நீண்ட நோக்கம்கொண்டதொன்றாகும்.

சிங்களவர்களைப் பொறுத்து பௌத்தமதம் என்பது தமது ஏகபோகம் என்பது போலுள்ளது. ஆனால், உண்மையில் பௌத்தமதம் சிங்களவருக்கு மட்டுமானதல்ல. உலகின் பலபாகங்களிலும் குறிப்பாக தென்கிழக்கு ஆசியா,கிழக்காசிய நாடுகளிலும் பௌத்தம் உயிர்வாழ்கின்றது. சிறிலங்காவைவிட பலமடங்கு மக்கள் பௌத்தமதத்தைப் பின்பற்றுகின்றனர்.

ஆனால் சிங்களப் பேரினவாதிகளோ பௌத்தம் தமக்கு மட்டுமே உரியது என்பது போன்று கூச்சலிடுகின்றனர். பௌத்த சின்னங்கள் புத்தர் சிலைகள் எங்கெங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் பௌத்தம் இருந்தது பௌத்தர்கள் இருந்தார்கள் என்பதே உண்மை. ஆனால், சிங்களப் பேரினவாதிகளோ அங்கிருந்தவர்கள் எல்லாம் பௌத்த சிங்களவர்கள் என வாதிடுகின்றனர்.

இந்நிலையில் தமிழர் தாயகப்பகுதியில் அமைக்கப்படும் விகாரைகள், புத்தர்சிலைகள் என்பன ஆக்கிரமிப்புச் சின்னங்களாகவே பார்க்கத்தக்கவை. கடந்த 50 ஆண்டு காலத்தில் தமிழர் தாயகப்பகுதியில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரைகளும், சிலைகளும் படிப்படியாக ஆக்கிரமிப்புச் சின்னங்களாகவே மாற்றம் கண்டன. அதற்கு அரசாங்கத் தரப்பும் ஊக்கமளித்து வந்துள்ளது.

இந்த வகையில் அண்மையில் திருமலை நகரின் மையப்பகுதியில் இரவோடு இரவாக நிறுவப்பட்ட புத்தர்சிலையானது அங்கு பதற்றமானதொரு சூழ்நிலையைத் தோற்றிவித்தபோதும் ஆட்சியாளர்கள் அதற்குத் தீர்வு எதையும் காணவில்லை. இச்சிலை தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பைக்கூட அவர்கள் அமுல்செய்யத் தயாராக இல்லை. மாறாக அச்சிலையை அங்கு நிரந்தரமாக நிலைகொள்ள வைப்பதற்கு ஏற்ற வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இத்தகையதொரு நிலையில் வலிகாமம் வடக்கில் மாதகலிலும், பலாலியிலுமாக இரண்டு விகாரைகள் திறக்கப்பட்டுள்ளன. மக்களை அவர்கள் குடியிருப்புக்களில் இருந்து விரட்டிவிட்டு அப்பகுதிகளை ஆக்கிரமித்துள்ள இராணுவம், அங்கு விகாரைகளை நிறுவியுள்ளமை தமது ஆக்கிரமிப்பை வலியுறுத்துவதற்கும், நிலைநிறுத்துவதற்குமான நடவடிக்கையே ஆகும்.

ஆனால் இத்தகைய நடவடிக்கை மூலம் ஆக்கிரமிப்பாளர்கள் எண்ணுவது போன்று தமிழர்தாயகப்பகுதி பௌத்த சிங்களவரின் ஆளுகைக்குட்பட்டதென்றோ பௌத்த – சிங்களவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவோ இருந்ததாக – இருப்பதாக யாராவது எண்ணுவார்களேயானால் அவர்கள் ஏமாற்றம் அடைபவர்களாகவே இருப்பார்கள்.

ஏனெனில் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் தமிழர்தாயகத்தை விட்டு வெளியேறும்போது தற்பொழுது ஆக்கிரமிப்புச் சின்னங்களாக உருப்பெறும் பௌத்த சின்னங்களும் அகற்றப்படும். இதனை ஆக்கிரமிப்பாளர்கள் தாங்களே மேற்கொள்வது விரும்பத்தக்கதாகும். அவ்வாறு இல்லாதுவிடில் அவற்றை அப்புறப்படுத்துதல் எமது தமிழ்மக்களின் கடப்பாடாகிவிடும்.

ஏனெனில், இது தமிழர்தாயகத்தைப் பொறுத்து தேவையற்றதொன்று என்பது மட்டுமல்ல, அது உருவாக்கப்பட்டதன் நோக்கம் ஆக்கிரமிப்பை உறுதி செய்வதற்காகவுமே ஆகும். ஆகையினால், ஆக்கிரமிப்பாளர் வெளியேறும்போது பௌத்த சின்னங்களை அகற்றுதல் – ஆக்கிரமிப்புச் சின்னங்கள் அகற்றப்படுதல் என்பதன் அடிப்படையிலானதாக இருக்குமேயொழிய பௌத்த சின்னங்கள் அகற்றப்படுதல் என்பதாக இருக்கமாட்டாது.

இதனைச் சிறிலங்காவில் பௌத்தத்தின்மீது விசுவாசம் கொண்டவர்களுக்கு மட்டுமல்ல உலகின் மதம் மற்றும் அதனுடன் சார்ந்த கலாச்சாரத்தைப் பேணும் அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் உலக நாடுகளும் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். அதாவது புத்தர்சிலைகளும், பௌத்த விகாரைகளும் வழிபாட்டிற்கு அமைக்கப்பட்டமையும் வரலாற்று ரீதியில் உள்ளவை தவிர ஆக்கிரமிப்பு போக்கில் அமைக்கப்பட்ட யாவுமே அப்புறப்படுத்தப் படுதல் என்பது மதத்திற்கு எதிரானதோ அன்றி கலாச்சாரங்களுக்கு எதிரானதோ அல்ல. அவை ஆக்கிரமிப்புக்கு எதிரான நடவடிக்கைகளே ஆகும்.




# மிகப்பெரிய அமைச்சரவையை கொண்டிருப்பது அடிப்படையற்ற அரசியல் சம்பிரதாயம்

## – ரான்ஸ்பரன்ஸ் இன்ரநஷனல் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா அமைச்சரவையில் எண்ணிக்கை மிக அதிகம் என ரான்ஸ்பரன்ஸ் இன்ரநஷனல் அமைப்பு விமர்சித்துள்ளது.

சிறிலங்கா போன்றதொரு நாட்டிலே மிகப் பெரிய அமைச்சரவை ஒன்றை நடத்திச் செல்வது அடிப்படை அற்ற அரசியல் சம்பிரதாயம் எனக் குறிப்பிடும் ரான்ஸ்பரன்சி அமைப்பு இதற்கு எதிராக மக்கள் மத்தியில் எதிர்க் கருத்துக்கள் உருவாக வேண்டும் எனவும் கேட்டுள்ளது.

இல்லாவிட்டால் இந்தத் தவறான நடைமுறை சம்பிரதாயமாக தொடர்ந்து செல்லக்கூடும். நடைமுறை அரசில் இருவர் தவிர்ந்த அரசின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அமைச்சர்களாகவோ, பிரதி அமைச்சர்களாகவோ பதவி வகிக்கின்றனர். இதன் காரணமாக நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதிக்கும் இதனைக் கண்காணிப்பது கடினம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (32)

# மேர்வின்சில்வா மீதான நடவடிக்கைக்கு சனாதிபதியிடமிருந்து உரிய பதிலில்லை!

## – மலையக மக்கள் முன்னணி விசனம்

(கொழும்பு)

பிரதிஅமைச்சர் மேர்வின் சில்வாவின் மீது நடவடிக்கை எடுக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இன்னமும் சனாதிபதி பதில் அளிக்கவில்லை என மலையக மக்கள் முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

சிறுபான்மை மக்களை புண்படுத்தும் வகையில் மேர்வின் சில்வா தெரிவித்த கருத்துக்கள் அந்த மக்கள் இந்த நாட்டில வாழ்வதற்கு விடுக்கப்பட்ட சவாலாகவே கருத வேண்டியிருந்தது.

இந்த நிலையில் இதனை எதிர்த்து மலையக மக்கள் முதன் முறையாக கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியதாகத் தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேகரன் இதனபோது சனாதிபதிக்கு கோரிக்கை ஒன்று முன்வைக்கப் பட்டதையும் நினைவூட்டியுள்ளார்.

எனினும் இதற்கு எந்த ஒரு பதிலையும், நடவடிக்கையையும் சனாதிபதி மேற்கொள்ளாமையானது, சிறுபான்மை மக்களை உதாசீனப் படுத்தும் நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளதாக சந்திரசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

# முப்பது இலட்சத்திற்கு மேற்பட்டோருக்கு அடையாள அட்டைகள் இல்லை

## – சிறிலங்கா ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

முப்பது இலட்சத்திற்கு அதிகமானவர்கள் நாட்டில் அடையாள அட்டைகள் இல்லாமல் இருக்கின்றார்கள் என்றும் நான்கில் ஒரு பகுதியினர் இன்னும் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பம் செய்யவில்லை என்றும் சிறிலங்காவின் ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் எச்.கே.கீதசேன தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டைகள் இல்லாத 30 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றுள்ளார்கள் பள்ளிக்கூட மாணவ, மாணவிகள் தாம் கல்வி பயிலும் பாடசாலை அதிபர் மூலமாக அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். மேலும் கிராமங்களில் வசிப்பவர்களின் அடையாள அட்டைகள் யாவும் 1977 ஆம் ஆண்டுக்கு முன்னதாக வழங்கப்பட்டதென்று ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக நாட்டில் உள்ள சகல பிரதேச செயலாளர்களின் காரியாலயங்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது. கிராமசேவையாளர்களின் மூலமாக அடையாள அட்டை விண்ணப்படிவங்கள் பூர்த்தி செய்து அனுப்புவதற்கான சகல அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு மீனவர்களை காணவில்லை

(வடமராட்சி)

படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்கின் மணற்காடு பகுதியில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரைக் காணவில்லையென புகார் செய்யப் பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலைவேளை படகொன்றில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரே காணாமல் போயுள்ளனர். காணாமல் போன மீனவ இளைஞ்களான மணற்காட்டைச சேர்ந்த சங்கியரூபன் மற்றும் மிக்கேல்பிள்ளை, றெசியன் ஆகிய இருவரது நிலை தொடர்பாகவும், தகவல் பெற்றுத் தருமாறு வடமராட்சி கிழக்கு மீனவ சங்கங்களின் சமாசம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்திடம் உதவி கோரியுள்ளது. இதேபோல காணாமற்போன மீனவர்கள் இரு வரையும் தேடி, சக மீனவர்கள் இன்று மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெற்றிருக்கவில்லை.

# பொது நிகழ்வுகளில் பங்கேற்க சிறிலங்கா பிரதமருக்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளும் கூட்டங்கள் யாவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவரின் பாதுகாப்புக் கருதியே இவைகள் யாவும் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதென பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமர் நாள் ஒன்றுக்கு நான்கு கூட்டங்களில் கலந்து கொள்வாரானால் அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும். அதற்கு மேல் அவர் கூட்டங்களில் கலந்துகொள் வாரானால் எம்மால் பாதுகாப்பு வழங்குவது மிகக் கடினமானதாகும் என பொலிஸ்மா அதிபர் சந்திராபர்னாந்து தெரிவித்துள்ளார்.

# விடுதலையை விரைவாக்க வேண்டுமென்ற மனவுணர்வு மக்களிடையே மேலோங்கியுள்ளது

## - தமிழ் தேசிய எழுச்சி செயலணிக்குழு தலைவர் கருத்து

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்பேசும் மக்கள் மனதில் விடுதலையை விரைவுபடுத்த வேண்டும் என்கின்ற உணர்வு மேலோங்கியுள்ளதனை மக்களுடனான சந்திப்புக்களின்போது காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் தமிழ் ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன கலந்துரையாடலின்போது தமிழ் தேசிய எழுச்சி செயலணிக் குழு தலைவர் எஸ்.பிரபாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில;

கடந்த மூன்றரை ஆண்டு கால சமாதான சூழலின்போது தமிழ் மக்களின் இயல்பு வாழ்வில் எதுவித மாற்றமும் ஏற்பட்டதோ என்றால் இல்லையென்பதே உண்மையாகும்.

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு உதவிட அமைக்கப்பட்ட கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பினைக்கூட நடைமுறைப்படுத்த விரும்பாத அரசும் சிங்களப் பேரினவாதிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்க முன்வருவார்களா, தருவார்கள் என்று நம்ப முடியுமா? சர்வதேச நாடுகளிலிருந்து எவர்தான் வந்து எதைத்தான் எடுத்தியம்பினாலும் சிங்களப் பேரினவாத அரசு எந்தவிதமான நியாயமான தீர்வையும் எமது தமிழ் மக்களுக்கு வழங்க முன் வரமாட்டார் என்பதே உண்மையாகும்.

எனவே எமது நிலைமையினை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் முதலாம் திகதியன்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் சூழ்நிலை உருவாக வேண்டும். எமது மரபு வழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்றவகையில் எம்மையும், எமது போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்றதனை அன்றைய தினம் அனைவரும் கிளர்ந்தெழுந்து எமது உரிமைக் குரலை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த முன்வரவேண்டும். இந்த நிகழ்வினை மக்கள் மத்தியில் அவர்களின் மனங்களில் பதிய வைக்க வேண்டியது தமிழ் ஊடகவியலாளர் ஒவ்வொருவரினதும் தார்ப்பரிய கடமையாகும் என்றார். (சோ)

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக புதிய கட்டடம் திறந்து வைப்பு

(வடமராட்சி கிழக்கு)

நீர்ப் திட்ட நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மாடிக் கட்டடம் நேற்று மதியம் 12.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

முதலில் பொதுச்சுடரினை பளை கோட்ட முன்னாள் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பூபாலசிங்கம் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை பளை கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றி வைத்தார்.

பிரதேச செயலகப் பெயர்ப் பலகையினை கிளி. மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் திரைநீக்கம் செய்து வைத்தார். பிரதேச செயலக நினைவுக்கல்லினை கிளி. மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தயா குணரட்ண சிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

பிரதேச செயலக புதிய கட்டடத்தினை கிளி. மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். பிரதேச செயலரின் அறையினை கிளி. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேத நாயகமும் திட்டமிடல் அலுவலின் அறையினை கிளி. மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசை அமுதனும், நிர்வாக உத்தியோகத்தரின் அலுவலகத்தை யாழ். மாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் பணிப்பாளர் புத்திசிகாமணியும் காணி அலுவலகத்தினை கிளி. மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி உஷாவும், தாபனக் கிளையினை கண்டாவளை உதவி பிரதேச செயலரும். நீதிக் கிளையினை கிளி. மாவட்ட செயலக பிரதான கணக்காளர் பத்மநாதனும், சமூக சேவைகள் கிளையினை கிளி.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தயா குணரட்ணமும், காணிக் கிளையினை பளை கோட்டக் கல்வி அதிகாரி இராமலிங்கமும், மாநாட்டு மண்டபத்தினை கிளி மாவட்ட அரச அதிபர் இராசநாயகமும் நடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

## ரணிலின்...

குடும்பத்தினருடன் பல வருடங்கள் பிரித்தானியாவில் வாழ்ந்து வந்ததாகவும், விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கை வந்திருந்ததாகவும், கைது செய்யப்பட்ட நபர் பொலிசாரிடம் கூறியுள்ளார்.

சிறு வயதில் கல்வி கற்ற பாடசாலை, விளையாடிய மைதானம் மற்றும் காலம் சென்ற ஒருவரது கல்லறை ஆகியவற்றை இந் நபர் ஒளிப்பதிவு செய்ததாகப் பொலிசார் கூறினர்.

இந் நபரிடமிருந்து வீடியோ கமராவையும் டிஜிற்றல் கமராவையும் ஒளிப்பதிவு நாடாக்களையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

# பண்டாரவன்னியன் வெற்றி விழாவைச் சிறப்பிக்கும் போட்டிகளின் முடிவுகள் வெளியாகின

(ஒட்டுசுட்டான்)

நாளைய தினம் நடைபெறவுள்ள மாவீரர் பண்டார வன்னியன் 202 நிறைவு வெற்றி விழாவைச் சிறப்பிக்கும் வகையில் இடம்பெற்ற கவிதை, கட்டுரை ஓவியப்போட்டிகளுக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன.

**ஓவியம்-** முதலாம் இடம் பரமேஸ்வரன் நிறைஞ்சன்,மு/ கரைச்சிக்குடியிருப்பு, முல்லைத்தீவு . இரண்டாமிடம் புவனேந்திரராசா திலீபன் தரம் 10 கலைமகள் வித்தியாலயம் முள்ளியவளை, மூன்றாமிடம் ரூபமூர்த்தி பிரகாஸ் கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.

**கட்டுரை -** முதலாமிடம் மாடாசாமி புஸ்பகுமார் புனித பூமி சிறுவர் இல்லம் முத்துஐயன்கட்டு, இரண்டாமடம் கா. பாலன் அறிவாலயம் இமயாணன் கிழக்கு உடுப்பிட்டி, மூன்றாமிடம் மீனலோஜினி இதய சிவதாஸ் சிவநகர். கிளிநொச்சி.

**மரபுக்கவிதை-** முதலாமிடம் மா. மாசிலாமணி மணிமாடம் முக்கனிச் சோலை: முள்ளியவளை, இரண்டாமிடம் துஷா துரைரத்தினம் ஊரிக்காடுவல் வெட்டித்துறை, மூன்றாமிடம் தம்பிராசா பரமலிங்கம், நாவலடி ஒழுங்கை வடமேற்கு யாழ்ப்பாணம்.

**புதுக்கவிதை-** முதலாமிடம் ப.தீந்தமிழ் மாலதி படையணி தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழம். இரண்டாமிடம் சந்திரசேகரம் முகுந்தன், கெற்பெலி மேற்கு மிருசுவில், யாழ்ப்பாணம் . மூன்றாமிடம் கா. பாலன், அறிவாலயம் இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

தனிப்பட்ட அழைப்புகள் சமகாலத்தில் கிடைக்கப்பெறாத வெற்றியாளர்கள் இவ் அறிவித்தலை அழைப்பாக ஏற்று வருகை தந்து பரிசினைப் பெற்றுச்செல்வதுடன் போட்டியில் ,கலந்து கொண்ட அனைவருக்கும் பண்டாரவன்னியன் அறங்காவல்கழகம் வாழ்த்துக்களையும தெரிவித்துக்கொண்டுள்ளது. (05)

## இந்தியத்...

சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அனைத்து இலங்கையர்களும் இத்திட்டத்தை எதிர்க்க வேண்டும் எனவும் கேட்டுள்ளது.

பதினைந்து இலட்சத்திற்கும் அதிகமான தமிழ்நாட்டு மீனவர்கள் பாதிக்கப்படவுள்ளார்கள் எனினும் இந்திய மத்திய அரசு பிடிவாதப் போக்கையே கடைப்பிடித்து வருவதாகவும் சேதுசமுத்திரத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்று இன்று புதன்கிழமை மதியம் 12.30 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளது.

## யுத்த நிறுத்த...

முன் தினம் தொடர்பினை ஏற்படுத்த முடிந்தமையினால் வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர் சன் இதனை சனாதிபதிக்கு அறிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அரசாங்க சமாதான செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகமான ஜோன் குணரத்னவை நேற்று முன்தினம் காலை நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் சந்தித்து லண்டனில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகருடன் நடைபெற்ற சந்திப்புக் குறித்து விளக்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் சந்திப்பதற்கான இடம் மற்றும் நேரத்தை முடிவு செய்வதற்கான நடவடிக்கைகளில் தற்போது நோர்வேத் தரப்பு ஈடுபட்டிருப்பதாகவும் விதார் ஹெலகேசன் கூறினார்.

இந்த சந்திப்பின்போது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கான அதிகாரங்களை அதிகரிப்பது குறித்து முடிவு செய்யப்படுமா என கேட்கப்பட்டதற்கு இச் சந்திப்பானது யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்தல் அதற்கான செயற்பாடுகள் என்பன குறித்து பேசப்படுவதற்கே ஒழுங்கு செய்யப்படுகிறது. யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அதிகாரம் அதிகரிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி குறித்த இரு சாராருமே முடிவு செய்ய வேண்டும் என்றார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை முழுமையாக அமுலாக்கம் தொடர்பில் இடம்பெறவுள்ள சந்திப்பில் முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கேட்டுள்ளதாகவும் அவரின் வேண்டுகோளை தான் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் தெரியப்படுத்தவுள்ளதாகவும், கூறிய அவர் விசேட சமாதான பிரதிநிதி எரிக்சூல்கெய்ம் சமாதான நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டதாக வெளியான செய்திகளை அவர் மறுத்துள்ளார்.

## தமிழ்மக்கள்...

அரசாங்கம் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறிலங்கா படையினர் அப்பாவி தமிழ்மக்களை தொல்லைப்படுத்துவதிலும், கைது செய்வதிலும் ஈடுபடுகின்றனர். இந்த நிலை நாடு முழுவதிலும் பரவலாகக் காணப்படுகின்றது. எமக்குக் கிடைக்கும் செய்திகளின்படி கொழும்பில் மாத்திரம் 800 இற்கும் அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கு பகுதிகளிலும் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் படை முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டும் பலப்படுத்தப்பட்டும் வரும் செயற்பாடுகள் படைத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து விலகி யுத்தம் ஒன்றை ஆரம்பிக்க தீர்மானித்து விட்டார்கள் என்று பொது மக்கள் மனதில் எண்ணத் தோன்றுகின்றது.

மன்னாரிலும் கூட பொது மக்கள் குடியிருப்புக்களை சுற்றி வைப்பதும் வீடுகளுக்குள் அத்துமீறிப் புகுவதும் மக்களை அச்சுறுத்துவதும் நடைபெற்று வருகின்றது. பலர் எதுவித காரணமுமின்றி கைது செய்யப்பட்டுள்ளனர். பேசாலையில் தும்பு ஆலையில் வேலை செய்து கொண்டிருந்த 13 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வீதிக் காவல்கள் அதிகரிக்கப் பட்டும் எங்கும் படையினர் நிறைந்து யுத்தத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் போன்றும் காட்சி அளிக்கின்றது. இதனால் மக்கள் பயத்திலும், பதற்றத்திலும் உள்ளனர். அவசர கால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களை அச்சப்படுத்துவதாகவும் கருதுகின்றோம். அமைதி நிலை முடிவிற்கு வந்து விட்டதாகவும், எந்த நேரமும் ஆபத்து வெடிக்கலாம் எனவும் மக்கள் பயந்து கொண்டிருக்கின்றனர். எனவே அமைதியின் பாலுள்ள அக்கறை காரணமாகவும், அச்சுறுத்திக் கொண்டிருக்கும் யுத்தத்தைத் தடுப்பதற்காகவும், நாங்கள் விரைந்து செயற்பட்டு ஏற்படவிருக்கும் ஆபத்தை தடைசெய்யும் படி கேட்டுக் கொள்கின்றோம் இதை நீங்கள் செய்யத் தவறினால் ஒஸ்லோவில் நடைபெற இருப்பதாகக் கருதப்படும் பேச்சு வார்த்தைகள் அர்த்தமற்றதாகி விடும் எனவும் அதில் குறிப்பிட்டுள்ளது.

மன்னார் மாவட்ட வெகுஜன ஒன்றியம், வர்த்தக சங்கம், மாதர் ஒன்றியம், மாணவர் ஒன்றியம், வாகன உரிமையாளர் சங்கம், உழவு இயந்திர உரிமையாளர் சங்கம், விவசாய அமைப்பு மீனவர் அமைப்பு என் பனவே இந்த மகஜரைக் கூட்டாகக் கையளித்துள்ளன.

இதன் பிரதிகள் மேதகு மன்னார் ஆயர், நோர்வே தூதரகம், ஜப்பான் தூதரகம், ஐரோப்பிய ஒன்றியம், செயலாளர் நாயகம் ஐ.நா.சபை, கிளிநொச்சி மற்றும் கொழும்பு சமாதானச் செயலகம் என்பவற்றிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


# அந்தியேட்டி அழைப்பு



அமரர்

## திரு. சிதம்பரப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை

செம்மலை, அளம்பில்.

கடந்த 2005.07.26ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் 25.08.2005 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

(6604)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.